விச்வாவஸு ஹு மார்கழி மீ
டிஸம்பர் 2025 - ஜனவரி 2026

மலர்: 8
இதழ்: 9

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்



MONTHLY NEWSLETTER FROM:
**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com



திருப்பாணாழ்வார் திருநக்ஷத்ரம்

விச்வாவஸு ஹு மார்கழி மீ
டிஸம்பர் 2025 - ஜனவரி 2026

மலர்: 8
இதழ்: 9

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

| ஞாயிறு முதல் புதன் வரை | | |
|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் |
| 9.45 | - | சாற்றுமுறை |

| வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|
| 6.00 | - | விச்வரூபம் |
| 7.30 | - | பொது தரிசனம் |

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன் | ஸ்ரீ L.N. ஸ்ரீநிவாஸன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** P.S. Anand
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai & 87, Cell : 95000 45604
Designed by: ye**SK**ay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஶ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்$^{3}$ரி ஸமம் ஸ்தா$^{2}$நம் ப்$^{3}$ரஹ்மாண்டே$^{3}$ நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே$^{3}$வோ ந பூ$^{4}$தோ ந ப$^{4}$விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

ஒருநாளை ஐந்து கூறாக்கி, அந்த அந்த ஐந்து காலங்களிலும் ஐந்து கார்யங்களை ஸ்ரீவைஷ்ணவன் செய்ய வேண்டும் என்பது சாஸ்திர வழக்கு. இந்த ஐந்துகாலங்களையும் முறையே அபிகமனம், உபாதானம், இஜ்யை, ஸ்வாத்யாயம் மற்றும் யோகம் என்று பெரியோர் கூறுவர். அந்தந்த காலங்களில் செய்ய வேண்டிய கிரிசைகளை நம் ஆசார்ய ஸார்வபௌமர் ஸ்ரீவைணவ தினசரி என்னும் தீந்தமிழ் நூலில் பேரருளாளன் விஷயமாகத் தெரிவிக்கிறார்.

முதல் இரண்டு பாட்டுக்களால் அபிகமன கால கார்ய க்ரமத்தை அநுஸந்திக்கிறார். அதில் முதல் பாசுரத்தில், மூடிக்கொண்டிருந்த நித்திரையாகிய இருள் ஒழிந்த பின், மனத்தில் உண்டாகின்ற நல்ல ஜ்ஞாநத்துடன், ஸ்ரீஹஸ்திகிரியில் எழுந்தருளியுள்ள, கரிய நிறங்கொண்ட பேரருளாளனுடைய திருவடி இரண்டையும் அன்புடன் போற்றுகின்ற சிறந்த பாகவதர்கள், வெகு காலமாய் **ஹரி: ஹரி: ஹரி: ஹரி: ஹரி: ஹரி: ஹரி:** என்று ஏழுமுறை அந்தத் திருநாமத்தையே தினமும் அநுஸந்திப்பர். ஸ்ரீசௌனக மஹர்ஷியும் ‘உத்திஷ்டந் சிந்தய ஹரிம்: என்று காலையில் எழுந்தவுடன் ஹரி நாமத்தை ஸ்மரிக்குமாறு பணித்தார்.

ஸ்ரீகோதையாரும் திருப்பாவையில் **வெள்ளத்தரவில் துயிலமலர்ந்த வித்தினை உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும் மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம் உள்ளம் புகுந்து குளிந்து** என்றாள். ஸர்வ பாபங்களையும் போக்குகின்றானாகையாலே ‘ஹரி’ என்ற பெயர் பகவானுக்கு ஏற்பட்டிருக்கிறது. பாபமெல்லாம் கழிந்தால் ஸ்வபாவமாக நமக்குள்ள பரமானந்தம் தானே ஆவிர்பவிக்கும். எம்பெருமானுடைய திருநாமங்களைப் பாமரர் உச்சரித்தாலும் அவை பரம போக்யங்களே. ஆகிலும் இப்பெரியோர்களின் திருவாக்கிலிருந்து வரும் பகவந்நாமங்களுக்குத் தனிப்பட்ட ஒரு சிறப்பு இருக்கின்றது. இவை பகவத் பக்தியினால் கனிந்த அவர்களுடைய நெஞ்சிலிருந்து பரவசமாய் உதித்தவை.

ஸ்ரீதொண்டரடிப்பொடி ஆழ்வாரும் திருமாலையின் முதல் பசுரத்தில், “எல்லா உலகங்களையும் ப்ரளய காலத்திலே திருவயிற்றிலே வைத்து ப்ரளயம் நீங்கினபிறகு அவற்றை வெளிப்படுத்திய ஜகத்காரணபூதனே! அரங்க மாநகருளானே! உனது திருநாமத்தைச் கற்றதனால் உண்டான செருக்கினாலே பஞ்சேந்திரியங்களையும் சிறையில் அடைத்து கலி தன்னை வெகுதூரம் உதறித் தள்ளி ஜயகோஷம் செய்து யமபடர்களின் தலைமேல் அடியிட்டுத் திரிகின்றோம்” என்று எம்பெருமானின் திருநாமப் பெருமையைப் பறை சாற்றுகின்றார். எனவே மார்கழி மாதத்தில் தினமும் திருமாலின் திருநாமத்தையும் திருப்பாவையையும் திருப்பள்ளியெழுச்சியையும் ஓதி, நாமும் பயன் பெறுவோம்.

கார்த்திகை மாதத்தில் நடந்தேறிய தாயார் பஞ்சமிதீர்த்த உத்ஸவம், ஆழ்வார் ஆசார்யர்களின் உத்ஸவங்களின் படங்கள், விசேஷ கட்டுரைகள் மற்றும் தொடர்களுடன் மார்கழி மாத தேசிக சந்தேசம் உங்கள் கரங்களில்...

ஸ்ரீ:

# When Dawn Meets Divinity — The Margazhi Magic

## FROM THE DESK OF TRUSTEES

The sacred month of Karthikai witnessed a series of grand celebrations at our Devasthanam, drawing hundreds of devotees to partake in the divine festivities. The highlight was the Panchami Theertha Utsavam, observed with splendour and deep devotion. Vedic recitations, Aruli-cheyal goṣhti and special alankarams imbued the temple precincts with a spiritually charged atmosphere.

Equally captivating was the Deepotsavam, during which the entire complex glowed with the radiance of countless lamps. This ambience, together with captivating alankaram to Perumal and Thayar, the resonant chanting of the Azhwar pasurams and the heartfelt participation of devotees transformed the utsavam into a luminous and unforgettable experience.

**Forthcoming Utsavams**

As we step into the auspicious month of Margazhi, the Devasthanam is preparing for a series of significant celebrations. The annual **Adhyayana Utsavam** — Pagal Pathu and Iraa Pathu — will be observed with traditional fervour. Devotees can look forward to the blissful sevai of Perumal, the Azhwars and Acharyas led by Nammazhwar, even as the nectarine verses of the Divya Prabandham are rendered in the traditional manner.

The most sacred **Vaikunta Ekadasi** will be celebrated with grandeur. Devotees will have the blessed opportunity to pass through the Paramapadha Vaasal and receive the divine anugraham of the Divya Dampathis. The day will feature special alankarams, extended goshti of Veda and Prabandha parayanam, and continuous darsan for the benefit of devotees.

In continuation of our tradition, the divine celebration of **100 Thada Koodaarai Vellum,** based on the profound Thiruppavai pasuram will also be held with dedication, symbolising surrender, abundance, and divine grace. There will be daily **Thiruppavai Upanyasam** at the temple during the month.

As in the previous years, the temple will host a **nine-day Nadhaswaram programme,** featuring renowned exponents who will fill the temple precincts with divine music befitting the sanctity of Margazhi.

In addition, the **Annual Music Festival,** organised jointly with Sri Parthasarathi Swamy Sabha and Carnatica, will be held for fifteen days at Sri Desika Vidya Bhavanam. Leading Carnatic musicians, promising young talents, and eminent scholars will participate and offer their musical tribute to the Divya Dampathis.

All devotees are warmly invited to participate in these sacred utsavams and receive the blessings of Sri Alarmelmanga Sametha Sri Srinivasa Perumal and Swami Vedanta Desika. May the divine grace fill our homes with peace, prosperity and spiritual fulfilment during this auspicious season.

| விச்வாவஸு வருட மார்கழி மாத பஞ்சாங்கம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
| டிஸம்பர் / ஜனவரி | மார் கழி | | | | | |
| 16.12.2025 | 1 | த்வாதசி | செவ்வாய் | ஸ்வாதி | மாத பிறப்பு - தனுர்மாத பூஜா ஆரம்பம். பெரியாழ்வார் | |
| 17.12.2025 | 2 | த்ரயோதசி | புதன் | விசாகம் | நம்மாழ்வார் | |
| 18.12.2025 | 3 | சதுர்தசி | வியாழன் | அனுஷம் | ஸ்ரீமந்நாதமுனிகள் | |
| 19.12.2025 | 4 | அமாவாசை | வெள்ளி | கேட்டை | ஹனுமத் ஜயந்தி, ஆஞ்ஜநேயர் உத்ஸவர் திருமஞ்ஜனம். தொண்டரடி பொடியாழ்வார் திருநக்ஷத்ரம். மாலை பெருமாள், ஆழ்வார் வீதிபுறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஹனுமத் ஜயந்தி: ஸ்ரீ R. முகுந்தன். ஆழ்வார் உத்ஸவம்: ஸ்ரீ S. ஸுதர்சனம் |
| 20.12.2025 | 5 | அமாவாசை | சனி | மூலம் | அத்யயன உத்ஸவ ஆரம்பம். பகல்பத்து 1-ம் நாள் | பகல் பத்து 10 நாட்களும் ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 21.12.2025 | 6 | ப்ரதமை | ஞாயிறு | பூராடம் | பகல்பத்து 2-ம் நாள் | |
| 22.12.2025 | 7 | த்விதீயை | திங்கள் | உத்திராடம் | பகல்பத்து 3-ம் நாள் | |
| 23.12.2025 | 8 | த்ருதீயை | செவ்வாய் | ச்ரவணம் | பகல்பத்து 4-ம் நாள் | |
| 24.12.2025 | 9 | சதுர்த்தி | புதன் | அவிட்டம் | பகல்பத்து 5-ம் நாள் | |
| 25.12.2025 | 10 | பஞ்சமி | வியாழன் | சதயம் | பகல்பத்து 6-ம் நாள் | |
| 26.12.2025 | 11 | ஷஷ்டி | வெள்ளி | பூரட்டாதி | பகல்பத்து 7-ம் நாள் | |
| 27.12.2025 | 12 | ஸப்தமி | சனி | உத்திரட்டாதி | பகல்பத்து 8-ம் நாள் | |
| 28.12.2025 | 13 | அஷ்டமி / நவமி | ஞாயிறு | ரேவதி | பகல் பத்து 9-ம் நாள் | |
| 29.12.2025 | 14 | தசமி | திங்கள் | அச்வினி | பகல்பத்து 10-ம் நாள். சாற்றுமுறை | |
| 30.12.2025 | 15 | ஏகாதசி | செவ்வாய் | பரணி | வைகுண்ட ஏகாதசி. காலை 4.30 மணிக்கு பரமபத வாசல் திறப்பு. பெருமாள், நம்மாழ்வார், தேசிகன் உள்புறப்பாடு. பத்தி உலாத்தல். காலை பெருமாள் சின்ன கருட வாஹனம், நம்மாழ்வார், தேசிகன் வீதிபுறப்பாடு. மதியம் திருமஞ் ஜனம். மாலை பெருமாள், நம்மாழ்வார் உள் புறப்பாடு. இராப்பத்து 1-ம் நாள். பெருமாள், ஆழ்வார் உள்புறப்பாடு | வைகுண்ட எகாதசி: ஸ்ரீ N. ராஜகோபாலன். இராப்பத்து 10 நாட்களும் ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 31.12.2025 | 16 | த்வாதசி | புதன் | கிருத்திகை | இராப்பத்து 2-ம் நாள். பெருமாள், ஆழ்வார் உள்புறப்பாடு | |
| 01.01.2026 | 17 | த்ரயோதசி | வியாழன் | ரோஹிணி | இராப்பத்து 3-ம் நாள். பெருமாள், ஆழ்வார் உள்புறப்பாடு | |
| 02.01.2026 | 18 | சதுர்தசி | வெள்ளி | ம்ருகசீர்ஷம் | இராப்பத்து 4-ம் நாள். பெருமாள், ஆழ்வார் உள்புறப்பாடு | |
| 03.01.2026 | 19 | பௌர்ணமி | சனி | திருவாதிரை | இராப்பத்து 5-ம் நாள். பெருமாள், ஆழ்வார் உள்புறப்பாடு | இராப்பத்து 10 நாளும் ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 04.01.2026 | 20 | ப்ரதமை | ஞாயிறு | புனர்வஸு | இராப்பத்து 6-ம் நாள். பெருமாள், ஆழ்வார் உள்புறப்பாடு | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 05.01.2026 | 21 | த்விதீயை | திங்கள் | புஷ்யம் | இராப்பத்து 7-ம் நாள். பெருமாள், ஆழ்வார் உள்புறப்பாடு. ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 1-ம் நாள். காலை ஆண்டாள் வீதிபுறப்பாடு. ஆண்டாள் திருமஞ்ஜனம் | ஆண்டாள் உத்ஸவம்: ஸ்ரீ S. கோபாலன் |
| 06.01.2026 | 22 | த்ருதீயை | செவ்வாய் | ஆயில்யம் | இராப்பத்து 8-ம் நாள். பெருமாள், ஆழ்வார் உள்புறப்பாடு. ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 2-ம் நாள். காலை ஆண்டாள் வீதிபுறப்பாடு. ஆண்டாள் திருமஞ்ஜனம் | ஆண்டாள் உத்ஸவம்: ஸ்ரீ R. ஸந்தான க்ருஷ்ணன் |
| 07.01.2026 | 23 | சதுர்த்தி | புதன் | மகம் | இராப்பத்து 9-ம் நாள். பெருமாள், ஆழ்வார் உள்புறப்பாடு. ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 3-ம் நாள். காலை ஆண்டாள் வீதிபுறப்பாடு. ஆண்டாள் திருமஞ்ஜனம் | ஆண்டாள் உத்ஸவம்: ஸ்ரீ முரளி ராகவன் |
| 08.01.2026 | 24 | பஞ்சமி | வியாழன் | பூரம் | இராப்பத்து 10-ம் நாள். நம்மாழ்வார் திருவடி தொழல். பெருமாள், ஆழ்வார் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு. திருவாய்மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை. ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 4-ம் நாள். காலை ஆண்டாள் வீதிபுறப்பாடு. ஆண்டாள் திருமஞ்ஜனம் | ஆண்டாள் உத்ஸவம்: ஸ்ரீ S. அருண் |
| 09.01.2026 | 25 | ஷஷ்டி | வெள்ளி | உத்திரம் | இயற்பா சாற்றுமுறை. ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 5ம் நாள். காலை ஆண்டாள் வீதிபுறப்பாடு. ஆண்டாள் திருமஞ்ஜனம் | ஆண்டாள் உத்ஸவம்: ஸ்ரீ P.V. பார்த்தஸாரதி குடும்பத்தினர் |
| 10.01.2026 | 26 | ஸப்தமி | சனி | ஹஸ்தம் | தேசிக ப்ரந்தம் சாற்றுமுறை. ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 6-ம் நாள். காலை ஆண்டாள் வீதிபுறப்பாடு. ஆண்டாள் திருமஞ்ஜனம் | ஆண்டாள் உத்ஸவம்: ஸ்ரீமதி கீதா ஸ்ரீநிவாஸன் |
| 11.01.2026 | 27 | அஷ்டமி | ஞாயிறு | சித்திரை | கூடாரைவல்லி. ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 7-ம் நாள். காலை ஆண்டாள் வீதிபுறப்பாடு. ஆண்டாள் திருமஞ்ஜனம் | ஆண்டாள் உத்ஸவம்: ஸ்ரீ கோபால ஸ்வாமி ஐயங்கார் பண்ட் - ஸ்ரீ ஆனந்த் ரங்காச்சாரி |
| 12.01.2026 | 28 | நவமி | திங்கள் | ஸ்வாதி | திருப்பல்லாண்டு தொடக்கம். ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 8-ம் நாள். காலை ஆண்டாள் வீதிபுறப்பாடு. ஆண்டாள் திருமஞ்ஜனம் | ஆண்டாள் உத்ஸவம்: ஸ்ரீ V.P. ப்ரேம்குமார். திருப் பல்லாண்டு உத்ஸவம்: ஸ்ரீ S.S. ராகவன் |
| 13.01.2026 | 29 | தசமி | செவ்வாய் | விசாகம் | நம்மாழ்வார். ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 9-ம் நாள். காலை ஆண்டாள் வீதிபுறப்பாடு. ஆண்டாள் திருமஞ்ஜனம் | ஆண்டாள் உத்ஸவம்: ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன் |
| 14.01.2026 | 30 | ஏகாதசி | புதன் | அனுஷம் | போகிப்பண்டிகை. ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 10-ம் நாள். காலை ஆண்டாள் வீதிபுறப்பாடு. பின்பு பெருமாள், ஆண்டாள் திருமஞ்ஜனம். மாலை பெருமாள், ஆண்டாள் வீதிபுறப்பாடு. திருக்கல்யாண உத்ஸவம். சேர்த்தி ஸேவை | ஆண்டாள் உத்ஸவம்: ஸ்ரீ ஜெயகிருஷ்ணா மதுரா மதன். போகி உத்ஸவம்: ஸ்ரீ K. ரங்கநாதன் குடும்பத்தினர் |

| |
|---|
| 20.12.2025 முதல் 29.12.2025 வரை – பகல்பத்து உத்ஸவம் |
| 30.12.2025 முதல் 08.01.2026 வரை – இராபபத்து உத்ஸவம் |
| 05.01.2026 முதல் 14.01.2026 வரை – ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் |
| 11.01.2026 (மார்கழி 27) கூடாரை வெல்லும் – 100 தடா உத்ஸவம் |
| 15.01.2026 (தை 1) – மகர ஸங்க்ராந்தி உத்ஸவம் |

# மோக்ஷதா (வைகுண்ட) ஏகாதசி மஹிமை

ஸ்ரீ உ.வே. E.V. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, திருவத்திபுரம், வைகுண்டவாஸீ

மாஸாநாம் மார்கசீர்ஷோஹம். மாதங்களுள் நான் மார்கழியாக இருக்கிறேன்' என்று கீதையில் கண்ணன் கூறுகிறார். மார்கழி மாதம் பகவானுக்கு ப்ரியதமம் என்று இதற்குப் பொருள் கொள்ள வேண்டும். பகவானைப் பூஜிப்பதொன்றையே செய்ய வேண்டும் என்று விதித்து, மற்ற கார்யங்களைச் செய்யக் கூடாது என்று நிஷேதித்திருக்கிறபடியால், மற்ற கார்யங்களுக்கு மார்கழி மாதம் சூன்யமாதம் ஆகிறது. ஆலய வழிபாட்டில் நாட்டம் கொண்டவர்களுக்கு இந்த மாதம் மிகவும் ரஸிக்கும். இம் மாதத்தில் சிறிய கோயிலிலும் பெரிய பூஜை நடக்கும். திறக்காத கோயிலும் திறக்கப்படும்.

எல்லாருடைய நினைவுக்கும் வரக்கூடியதும், எல்லாராலும் அநுஷ்டிக்கப்பெற்று வருவதுமான பரமபத (வைகுண்ட) ஏகாதசி இந்த மாதத்தில்தான் வருகிறது. இதுவே மோக்ஷதா என்ற மார்கழி சுக்ல பக்ஷ ஏதாதசி. தோன்றிய அப்பொழுதே சத்ரு நிரஸனமும் சிஷ்ட அநுக்ரஹமும் செய்யும் ஸ்ரீந்ருஸிம்ஹனைப் போல ஏகாதசியும் ஆகிறது. இதற்கு முன்பு மார்கழி மாதத்தில் கிருஷ்ண பக்ஷத்தில் ஏகாதசி தோன்றிய ப்ரகாரமும் முரனை அழித்த விதமும் கூறப்பட்டன. தோன்றியவுடனே சத்ரு ஸம்ஹாரம் செய்து, பிறகு ஸாது பரித்ராணம் செய்கிறது மோக்ஷதா என்ற சுக்ல பக்ஷ ஏதாதசி. மோக்ஷத்தை (துக்க நிவிருத்தியை) கொடுக்கிறது என்று இதன் பொருள்.

மார்கழி மாதத்தில் சுக்ல பக்ஷ ஏகாதசிக்கு முற்பட்ட பத்துத் தினங்களில் முதல் ஐந்து தினங்களில் முதலாயிரத்தையும், மேல் ஐந்து தினங்களில் பெரிய திருமொழியையும்திருக்குறுந்தாண்டகத்தையும் பிறகு பத்துத் தினங்களில் திருநெடுந்தாண்டகத்தையும், (வைகுண்ட ஏகாதசி முதற்கொண்டு) திருவாய்மொழியையும் அதற்கு மறுநாள் இயற்பா முழுவதையும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஆலயங்களில் எம்பெருமான் திருமுன்பே ஸேவிக்கப்பெறும் பாக்யத்தைப் பெற்ற மாதமாகும். இவ்வளவையும் கணக்கிடுவதற்கு வைகுண்ட ஏகாதசி முக்கிய காரணமாகிறது.

தர்மபுத்ரர் ஸ்ரீகிருஷ்ணனைப் பார்த்து, 'தேவதேவ! எல்லா ஜனங்களுடைய பாவங்களையும் போக்கி நன்மையைக் கொடுக்கும் ஏகாதசியின் உற்பத்தியைக் கேட்டேன். மார்கழி மாத சுக்ல பக்ஷ ஏகாதசியின் பெருமையை எடுத்துரைக்க வேண்டும்' என்று கேட்டார்.



'குந்தீஸுத! உன் அறிவுக்குத் தக்கபடி கேட்கிறாய். என் சரீரத்திலிருந்து தோன்றிய மார்கழி மாதக் கிருஷ்ண பக்ஷ ஏகாதசியைக் கூறினேன். இப்பொழுது சுக்ல பக்ஷ ஏகாதசியைக் கூறுகிறேன், கேள். இதைக் கேட்பவர் வாஜபேய பலனைப் பெறுவர். முன்பு நடந்த ஒரு விருத்தாந்தத்தைக் கூறுகிறேன், கேள்' என்றார் கண்ணன்.

சம்பகம் என்ற நகரத்தில் விஷ்ணுபக்தனும், வைகானஸன் என்ற பெயருடையவனுமான அரசன் வசித்து வந்தான். அவன் அரச முறைப்படி மக்களைத் தன் ப்ராணனைப் போல ரக்ஷித்து வந்தான். அந்த நகர மக்கள் தங்கள் வர்ணத்துக்கும் ஆச்ரமத்துக்கும் உரிய தர்மத்தை மேற்கொண்டு நல்ல தனிகர்களாகவும் பரோபகார சீலர்களாகவும் வாழ்ந்து வந்தனர்.

இவ்வாறு இருக்க ஒரு நாள் அரசன் இரவில் கனவில் தன் பித்ருக்கள் நரகத்தில் தலைகீழாகத்

தொங்கிக்கொண்டிருப்பதையும், ''மகனே! எங்களை இந்த நரகத்திலிருந்து கரையேற்றுவாய்'' என்று புலம்புவதையும் கண்டு வருந்தினான். ''என் பித்ருக்கள் தர்ம முறைப்படி ஆட்சி செய்து வந்தவர்களாயிற்றே. அவர்களுக்கு இந்தக் கதி நேரக் காரணம் யாதாக இருக்கும்?'' என்று அரசன் வியந்தான்.

பிறகு காலையில் அவன் தன் கார்யங்களை முடித்துக் கொண்டு தர்மசாஸ்த்ர நிபுணர்களை அழைத்து, ''தர்மவான்களே, என் பித்ருக்கள் நரகத்தில் தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருப்பதை நேற்று இரவில் கனவில் கண்டேன். அவர்கள் முறையிட்டதையும் கேட்டேன். நான் செங்கோல் செலுத்தி என்ன லாபம்? சதுரங்க ஸேனையையும் புத்திமான்களான மந்திரிகளையும் நற்குணமுள்ள மனைவியையும் வீரனான புத்ரனையும் எல்லா ஸுகங்களையும் பெற்றிருந்தும் எனக்கு மன அமைதி ஏற்படவில்லை. என்ன செய்வேன்? எங்கே செல்வேன்? என்ன தவம் செய்தால் இவ்வினை தீரும்? புத்ரன் ஜீவித்தும் நல்ல நிலையில் இருந்தும் பித்ருக்கள் நற்கதிக்குப் போகாவிட்டால் அந்தப் புத்ரனுக்கு என்ன பெருமை? பித்ருக்களுக்குத்தான் என்ன லாபம்? ஆதலால் இதற்குப் பரிஹாரம் செய்து பித்ருக்களை நற்கதிக்கு அனுப்பும் உபாயம் என்ன? கருணை கூர்ந்து கூற வேண்டும்'' என்று ப்ரார்த்தித்தான்.



அதைக் கேட்ட பண்டிதர்கள், ''அரசே! நம் நகரத்தின் அருகில் இருக்கும் காட்டில் பர்வத முனி வஸித்து வருகிறார். அவர் முக்காலமும் அறிபவர். அவரிடம் சென்று கேட்போம். அவர் இதற்குத் தகுந்த உபாயத்தைக் கூறுவார்'' என்று சொன்னார்கள்.

அரசன் மந்திரியும் ப்ரதானிகளும் சூழக் காட்டுக்குச் சென்றான். முனிவருடைய பெரிய ஆச்ரமத்தைக் கண்டான். நான்கு வேதங்களை எப்பொழுதும் ஓதிக்கொண்டிருக்கும் முனிவர்களுடன் இருக்கிற இரண்டாவது ப்ரஹ்மாவைப் போன்ற பர்வத முனிவரைத் தரிசித்தான். மிக்க பக்தியுடன் தண்டம் ஸமர்ப்பித்தான். பர்வதர் அரசனைப் பார்த்து, ''படை குடி கூழ் அமைச்சு நட்பு அரணோடு கூடிய நீ நலமுடன் இருக்கிறாயா?'' என்று வினவினார்.

''தேவரீருடைய திருவருளால் புறத்தே உள்ள ஸப்த அங்கங்களும் நலமே. ஒரு கனவு கண்டேன். அதனால் மிக்க மனவருத்தம் ஏற்பட்டுள்ளது. என் பித்ருக்கள் நரகத்தில் தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருக்கின்றனர். எந்தப் பாவத்தினால் அவர்களுக்கு இந்தக் கதி ஏற்பட்டது? அது போகும் மார்க்கம் என்ன? இதைத் தேவரீர் கருணை கூர்ந்து கூற வேண்டும்'' என்று ப்ரார்த்தித்தான்.

இதைக் கேட்டு பர்வத முனிவர் யோகத்தினால் அறிந்து அரசனைப் பார்த்து, ''அரசனே, உன் தந்தை மனைவியினிடத்தில் ருது காலத்தில் அதாவது சாஸ்த்ர ஸம்மதமான காலத்தில் ஸம்போகம் செய்யாமல் அலக்ஷ்யப் படுத்திவிட்டு ராஜ்ய வ்யாபாரத்தில் ஈடுபட்டார். அதனால் இந்தப் பாவத்தை அடைந்துள்ளார். நீ மார்கழி மாத சுக்ல பக்ஷ ஏகாதசியில் உபவாஸம் இருந்து அந்தப் பலனை அவர்களுக்குத் தத்தம் செய்தால் இந்தப் பாவத்திலிருந்து விடு பட்டு நற்கதியடைவர்'' என்று கூறினார்.

அரசன் முனிவரை வணங்கி விடை பெற்றுக்கொண்டு நகரத்தை அடைந்தான். பிறகு மார்கழி மாத சுக்ல பக்ஷ ஏகாதசியில் உபவாஸம் இருந்து அந்தப் புண்யத்தைப் பித்ருக்களுக்கு தானம் செய்தான். உடனே தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர். பித்ருக்கள் வைகானஸனைக் குறித்து, ''உனக்கு நலம் உண்டாக வேண்டும்'' என்று ஆசீர்வதித்து மோக்ஷத்தை அடைந்தனர்.

பிறகு, ''தர்மபுத்ர! இவ்வாறு எவன் மார்கழி மாத சுக்ல ஏகாதசியில் வ்ரதம் இருந்து என்னை பூஜிக்கிறானோ அவன் ஸகல பாபங்களிலிருந்தும் விடுபட்டு இழந்த மோக்ஷத்தை அடைவான். இதைக் காட்டிலும் பிரியமான வேறொன்று எனக்கு இல்லை. இதைப் படிப்பவர் வாஜபேய பலனைப் பெறுவர்'' என்று கிருஷ்ணன் தர்மபுத்ரருக்குக் கூறினார்.

ஸ்ரீ:

# கீதையின் பாதையில் கோதை

**ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்**

*...பற்றலர் வீயக் கோல் கையில் கொண்டு*
*பார்த்தன் தன் தேர் முன் நின்றானை...*
*[பெரிய திருமொழி 2-3-1]*

சத்ருக்களை ஸம்ஹரிக்கவென சாட்டையினைத் தனது திருக்கரங்களில் ஏந்தி பார்த்தனுக்குத் தேரோட்டியாக ஸ்ரீக்ருஷ்ணன் நின்றான் என்று குருக்ஷேத்ரக் காக்ஷியினை விவரிக்கும் பாசுர வரிகள் இவை.

ஸ்ரீக்ருஷ்ணன் பார்த்தனுக்கும், ஸஞ்ஜயன் த்ருதராஷ்ட்ரனுக்கும் பண்ணின உபதேசம் கீதை. பார்த்தனுக்கு அகக்கண், புறக்கண் என்று இரண்டும் திறந்திருந்ததனால் ஸ்ரீக்ருஷ்ணன் பண்ணின ஸதுபதேசம் ஸகல சேதனருக்குமான பாடமாகியது. த்ருதராஷ்ட்ரனுக்கு அகக்கண், புறக்கண் என்று இரண்டுமே மூடியிருந்ததனால், தனது அகக்கண் மூலம் ஸஞ்ஜயன் கண்டு சொன்னவை அவனுக்குப் பயனற்றதாயிற்று.

க்ருஷ்ணாவதாரத்தின் இறுதியில் ப்ரபஞ்சமானது கலியின் பிடியில் சிக்க, அதர்மம் தழைத்தோங்கியது. எம்பெருமான் கீதையில் பண்ணின உபதேசங்கள் பலகோடி நூறாயிரம் ஆண்டுகள் நிலைத்து நிற்க



வேண்டுமென்பதற்காக பூமிப்பிராட்டி கோதை நாச்சியாராக அவதரித்தாள். திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகியவற்றை ஸாதித்து கீதோபதேச த்தினைக் காத்தருளினாள். கீதையில் கண்ணன் ஸாதித்த உபதேசங்கள் பொக்கிஷமெனப் புதைந்துள்ள கோதையின் பாசுரங்களில் அந்வயித்து ஆனந்திப்போம்.

**ப்ராப்யமும் ப்ராபகமும் பரமனே**

கீதையின் ஏழாம் அத்யாயத்தில் பெறுவதற்கரிய ஜ்ஞானி யாரென்று பார்த்தனின் ஸாரதி ஸாதித்த விஷயம் இது.

*பஹூநாம் ஜந்மநாம் அந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே।*
*வாஸுதேவஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப: ॥ [19]*

‘‘பற்பல ஜன்மங்கள் கொண்ட பின்னர் இறுதியாக என்னையே ப்ராப்யமாகவும் ப்ராபகமாகவும் தாரக, போஷக, போக்யமாகவும் எண்ணுபவனே ஜ்ஞானி. இத்தகையவனே எனக்கு கிடைத்தற்கரிய பொக்கிஷ மாகிறான்,’’ என்பது இந்த ச்லோகத்தின் அர்த்தம்.

கீழ்க்கண்ட திருப்பாவை பாசுரம் இதனைத் தெளிவாக உணர்த்தும்.

*வையத்து வாழ்வீர்காள் நாமும் நம் பாவைக்கு*
*செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்*
*பையத் துயின்ற பரமனடி பாடி*
*நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி*
*மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்*
*செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்*
*ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கை காட்டி*
*உய்யுமாறெண்ணி உகந்தேலோர் எம்பாவாய்.*

(திருப்பாவை - 2)

இதில், **நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்** என்ற பதங்களின் மூலம், இவையெல்லாம் தாரக, போஷக, போக்யங்களில்லை என்பதை நிஷ்கர்ஷித்து, **பாற்கடலுள் பையத் துயின்ற பரமனடி** ஒன்றே ப்ராப்யமும் ப்ராபகமுமாகிறது என்ற ஸத்யத்தினை ஆச்ரிதற்கு உணர்த்துகிறாள் பூமிப்பிராட்டி.

அதிலும், எம்பெருமான் ஒருவனே சேஷி. தாம் அவனொருவனுக்கே சேஷபூதர்கள் என்பதை அறிந்து கொண்டதனால், தேகத்தினைப் போஷிக்கும் விஷயங்களான நெய், பால் ஆகிய நீர்ப் பண்டங்களைப் **பருக** வேண்டுமென்பதைக் கூட மறந்து **உண்ணோம்** என்று சொன்ன ஆய்ச்சியரின் (ஜ்ஞானிகள்) ப்ரதிபலன் எதிர்ப்பார்க்காத பக்தியினைக் காண்பித்தது இந்தப் பாசுரம்.

சாச்வதமெது என்றறிந்த ஜ்ஞானியர் தன்னையே ப்ராப்யமாகவும் ப்ராபகமாகவும் கொண்டு வர்த்திப்பர் என்ற கீதாசார்யனின் திருவாக்கிற்கு நாச்சியார் திருப்பாவையின் மூலம் கூறும் கட்டியம் இது.

**மாயனை வசப்படுத்தும் மானஸீகம்**

*பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி ।*
*ததஹம் பக்த்யுபஹ்ருதமச்நாமி ப்ரயதாத்மந: ॥* [9-26]

ப்ரபலமான கீதா ச்லோகமான இதில் எம்பெருமானது ஸௌலப்யம் பரிபூர்ணமாக வெளிப்படும். ''இலையையோ புஷ்பத்தினையோ கனியையோ, இவை ஏதும் கிடைக்காத பக்ஷத்தில் ஜலத்தினையோ உளமார்ந்த பக்தியுடன் எனக்கு ஸமர்ப்பித்தால், அதனை நான் ஏற்றுக் கொள்கிறேன்,'' என்று தேரோட்டியாக நின்று ஸாதிக்கிறான் அந்த ஆராத வெண்ணை விழுங்கி.

இந்த கீதா ச்லோகத்தின் பொருளினை ஒத்த நாச்சியாரின் பாசுரம் ஒன்றைப் பார்ப்போம்.

*மாயனை மன்னு வட மதுரை மைந்தனை*
*தூய பெருநீர் யமுனைத் துறைவனை*
*ஆயர் குலத்தினில் தோன்றும் அணி விளக்கை*
*தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை*
*தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது*
*வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்*
*போய பிழையும் புகுதருவான் நின்றனவும்*
*தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய்.*
(திருப்பாவை - 5)

இங்கு, **தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க** எனும் பதங்கள் ப்ராதாந்யம் பெறுகின்றன. எம்பெருமானே ப்ராப்யம், ப்ராபகம் என்று மஹாவிச்வாஸம் கொண்டு, பரிசுத்தியுடன் புஷ்பங்களை அவனது திருவடிகளில் தூவித் தொழுது, மானஸீகமாக த்யானம் செய்தல் வேண்டுமென்கிறாள் அந்த மாயனை ஆள்பவள்.

இங்கு பரிசுத்தி என்பது ஆத்மார்த்தமான பக்தியியையும் அன்பினையும் குறித்தது.

**மாதவன் அருள்வதனைத்தும் மங்களங்களே**

*அபிசேத் ஸுதுராசாரோ பஜதே மாம் அநந்யபாக் ।*
*ஸாதுரேவ ஸ மந்தவ்ய: ஸம்யக் வ்யவஸிதோ ஹி ஸ: ॥*
(கீதை 9-30)

''ஆசாரம், ஜன்மம், ஸ்வபாவம், ஜ்ஞானம் முதலானவற்றில் ஒருவன் தாழ்ந்தவனாகவே இருந்தாலும், எதையும் ப்ரயோஜனமாகக் கேட்காது என்னிடத்தில் பக்தி செய்வானெனில் அவன் ஜ்ஞானியருக்கு ஸமமானவன்.''

*க்ஷிப்ரம் பவதி தர்மாத்மா சச்வத் சாந்திம் நிகச்சதி ।*
*கௌந்தேய ப்ரதிஜாநீஹி ந மே பக்த: ப்ரணச்யதி ॥*
(கீதை 9-31)

''என் பக்தன் துராசாரமுடையவனாக இருந்தாலும், என் மீது அவன் கொண்ட பக்திக்குப் பரபக்தியே பலனாகி, துராசாரங்கள் நீங்கப் பெற்று, அவனது (பக்தி) யோகமானது பூர்த்தியாகி என்னை வந்து அடைவதற்கு வழி கோலும். எனது பக்தர்களுக்கு அழிவென்பதே கிடையாது. இதனை விச்வஸித்து நீ ப்ரதிஜ்ஞை மேற்கொள்வாய் அர்ஜுனா'' என்கிறான் அவனது தேரோட்டியாக நின்ற யசோதை மைந்தன்.

மேலே சொல்லப்பட்ட கீதா ச்லோகங்களின் அர்த்தத்தினை ப்ரதிபலிக்கும் நாச்சியார் திருமொழி பாசுரம் இது.

*மன்னு பெரும்புகழ் மாதவன் மாமணி வண்ணன்*
*மணிமுடி மைந்தன்*
*தன்னை உகந்தது காரண மாகஎன் சங்கிழக் கும்வழக்*
*குண்டே*
*புன்னை குருக்கத்தி ஞாழல் செருந்திப் பொதும்பினில்*
*வாழும் குயிலே*
*பன்னியெப் போது மிருந்து விரைந்தென் பவளவாயன்*
*வரக்கூவாய்.*
(நாச்சியார் திருமொழி 5-1)

இந்தப் பாசுரத்தில், **மாமணி வண்ணன் மணிமுடி மைந்தன் தன்னை உகந்தது காரணமாக என் சங்கிழக்கும் வழக்குண்டே** என்பவை ஆழ்ந்து நோக்கப்பட வேண்டிய பதங்கள்.

**க்ஷிப்ரம் தர்மாத்மா பவதி –** எனது பக்தனின் பக்திக்குப் பலனாக பக்தியே அமைந்து, அவனது யோகம் பூர்த்தியாவதற்குத் தடையாக இருக்கும் விரோதி ஸ்வரூபங்களை நீக்கி அவனை தர்மவானாக்குகிறது.

**மணிமுடி மைந்தன் தன்னை உகந்தது –** ஸ்ரீக்ருஷ்ணனை அபேக்ஷித்தேன். அந்த அபேக்ஷையே அவன் மீது அடியாள் கொண்ட ப்ரேமத்தினை மேலும் வலுப்பெறச் செய்து, அவனுடனான ஸம்ச்லேஷத்திற்கு வழிகோலும்.

**ந மே பக்த: ப்ரணச்யதி –** என் பக்தன் அழியமாட்டான்.

**என் சங்கிழக்கும் வழக்குண்டே –** எம்பெருமானது பக்தர்களுக்கு மங்களங்கள் மட்டுமே உண்டாகும் என்பதனால் அமங்களமே போல் அடியாளது கைவளை தொலைந்து போவதற்கு ப்ரஸக்தி இல்லை.

**கௌந்தேய ப்ரதிஜாநீஹி** - என் பக்தர்கள் அழியமாட்டார்கள் என்பதில் விச்வாஸம் கொண்டு நீ ப்ரதிஜ்ஞை செய்வாய் அர்ஜுனா – **ஸ்ரீக்ருஷ்ணனின் திருவாக்கு. பன்னியெப்போதுமிருந்து பவளவாயன் வரக் கூவாய்** – என் நாதன் என்னை வந்தடையும் வரை அவனது திருநாமங்களைக் கூவிக் கொண்டே இரு குயிலே – **கோதையின் திருவாக்கு.**

**க்ஷமை ப்ரார்த்திக்கும் இருவர்**

*ஸகேதி மத்வா ப்ரஸபம் யதுக்தம்*
*ஹே க்ருஷ்ண ஹே யாதவ ஹே ஸகேதி ।*
*அஜாநதா மஹிமா நம் தவேதம்*
*மயா ப்ரமாதாத் ப்ரணயேந வாபி ॥* (கீதை 11-41)

*யச்சாபஹாஸார்த்தம் அஸத்க்ருதோஸி*
*விஹாரசய்யாஸந போஜநேஷு ।*
*ஏகோதவாப்யச்யுத தத்ஸமக்ஷம்*
*தத் க்ஷாமயே த்வாமஹம் அப்ரமேயம் ॥* (கீதை 11-42)

அர்ஜுனன் ஸ்ரீக்ருஷ்ணனிடம் அபராத க்ஷமாபநம் பண்ணுவதாய் அமையும் இந்த இரண்டு ச்லோகங்களின் பொருளாவது:

''ஹே க்ருஷ்ணா! உனது ப்ரபாவம் அறியாததினாலோ, உன்னுடன் பற்பல காலம் பழகியதனால் தோழன் என்ற உரிமையிலோ பல ஸமயங்களில் நான் அடே க்ருஷ்ண, அடே யாதவா என்று உன்னைப் பரிஹாஸம் செய்திருக்கலாம். நாம் இருவரும் விளையாடிக் கொண்டிருக்கும் போதோ, உரையாடிய நேரத்திலோ, உண்ணும் ஸமயத்திலோ, தனிமையிலோ பிறர் முன்னிலையிலோ அறிந்தோ அறியாமலோ உன்னை நான் அவமதித்திருந்தாலோ ஏளனமாகப் பேசியிருந்தாலோ நடத்தியிருந்தாலோ, அதற்காக உன்னிடம் க்ஷமை ப்ரார்த்திக்கிறேன். மன்னித் தருள்வாய் பரப்ரஹ்மமே,'' என்கிறான் அர்ஜுனன்.

கோதை நாச்சியாரும் ஸ்ரீக்ருஷ்ணனிடத்தே அபராத க்ஷமாபநம் பண்ணுகிறாள்.

*கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்துண்போம்*
*அறிவொன்றும் இல்லாத ஆய்குலத்து உன்றன்னை*
*பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்*
*குறையொன்றும் இல்லாத கோவிந்தா!*
*உன்தன்னோடு*
*உறவேல் நமக்கிங்கு ஒழிக்க ஒழியாது*
*அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்*
*சிறுபேர் அழைத்தனவும் சீறியருளாதே*
*இறைவா! நீ தாராய் பறையேலோர் எம்பாவாய்.*
(திருப்பாவை - 28)

எம்பெருமான் மீதிருந்த ப்ரேமையினாலும், அவனை அடைந்துவிட வேண்டுமென்ற த்வரையினாலும் கோதை நாச்சியார், எம்பெருமானது பக்தைகளான ஆய்ச்சியரை சில பாசுரங்களில் வசைபாடியிருப்பாள்.

உதாஹரணமாக சில வசை மொழிகள்: பேய்ப் பெண்ணே (7), ஊமையோ செவிடோ (9), நாணாதாய் (14), பண்டே உன் வாயறிதும் (15) **அறியாத பிள்ளை களோம் அன்பினால் உன்தன்னை சிறுபேர் அழைத்தனவும் சீறியருளாதே** என்று அவனிடத்தே அபராத க்ஷமாபநம் பண்ணுகிறாள் நாச்சியார்.

''ஹே கோவிந்தா! நீ உன் பொழுதினை எப்பொழுதும் எங்களுடனேயே கழிப்பதனால் உன்னை ஸகாவாகக் கருதியோ, உனது ஸ்வரூபம் தெரியாமலோ, நாங்கள் அபவாதங்கள் பண்ணுகிறோம் என்பதையும் அறியாது உன்னிடம் அபசாரப்பட்டிருந்தால் எங்கள் மேல் சினம் கொள்ளாதே. கபடமறியாத எங்களது ப்ராயத்தினைக் கருத்தில் கொண்டு, உன் மீது நாங்கள் கொண்ட பேரன்பினால் வந்த வார்த்தைகள் அவை என்று புரிந்து கொண்டு உன்னிடம் க்ஷமை ப்ரார்த்திக்கும் எங்களை ரக்ஷித்தருள்வாய் பரப்ரஹ்மமே'' என்கிறாள் கோதை நாச்சியார்.

தனது நாயகனாம் ஸ்ரீக்ருஷ்ணன் உபதேசித்த கீதையின் பாதையில் ஆச்ரிதர் உய்ய பாசுரங்கள் பல ஸேவித்திருக்கும் கோதை நாச்சியார் எம்பெருமானிடம் நம்மைக் கொண்டு சேர்க்கும் மார்கதர்சியாவாள். திருப்பாவை முப்பதும் செப்பினவள் திருவடி பணிந்து, அவளிடமே ரக்ஷணம் ப்ரார்த்திப்போம்.

## வைணவ வழக்குச் சொற்கள் 16

**நெஞ்சாங்குலை:** ஹ்ருதயம்

**நெடுஞ்சாண்கிடை:** ஸாஷ்டாங்கம்

**நேமி:** சக்ரம்

**ப்ரமேயம்:** அறியப்படும் பொருள்; உண்மையாய் அறியத்தக்கது

**ப்ரதிபாஸம்:** தோன்றுதல்; To appear

**ப்ராப்யம்:** அடையவேண்டியது, பேறு

**ப்ராபகம்:** அடைவிப்பது

**ப்ராதான்யம்:** முதன்மை

**ப்ரோக்ஷணம்:** நீர்த் தெளிப்பு

**பள்ளிப்படுத்தல்:** அடக்கம் செய்தல், ஈமக்ரியை செய்தல்

பர ந்யாஸம், பர ஸமர்ப்பணம்: ஆசார்யனைப் புகலிடமாக அடைந்து அவன் மூலம் நற்கதிக்கு வழிகாட்டச்செய்தல், பெருமாளிடம் ப்ரபத்தி செய்வது / சரண் அடைவது, இதர தேவதை உபாஸனையிலிருந்து அறவே விடுவித்துக்கொள்ளல்

**பகவத் விஷயம்:** திருவாய்மொழி, திருவாய்மொழி வ்யாக்யானம், திருஆறாயிரப் படி, நம்பிள்ளை ஈடு ஆகியவை

**பர்யாய பெயர்:** அடைமொழி, இன்னொரு பெயர்

**பர்யாயம்:** ஒரே பொருளைத் தரும் வேறு சொல்; Synonym

**'தென்னிந்திய வைணவம் - ஓர் அறிமுகம்' நூலிலிருந்து**






## பஞ்சமி தீர்த்த உத்ஸவம்









பஞ்சமி தீர்த்த உத்ஸவம்













பஞ்சமி தீர்த்த உத்ஸவம்











பஞ்சமி தீர்த்த உத்ஸவம்













கலியன் உத்ஸவம்







ஸ்ரீ:



கலியன் உத்ஸவம்





திருப்பாணாழ்வார் திருநக்ஷத்ரம் - திருக்கார்த்திகை தீபோத்ஸவம்









கண்ணுக்கினியன

ஸ்ரீ:



திருப்பாணாழ்வார் திருநக்ஷத்ரம் - திருக்கார்த்திகை தீபோத்ஸவம்









ஸ்ரீ:

# அத்-திகிரி அருளாளன்

ஸ்ரீ உ.வே. அழிசூர் ஸுதர்சநாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

*அத்திகிரி அருளாளப்பெருமாள் வந்தார்*
*ஆனைபரிதேரின்மேல் அழகர் வந்தார்*
*கச்சிதனில் கண்கொடுக்கும் பெருமாள் வந்தார்*
*கருதவரம் தரும் தெய்வப்பெருமாள் வந்தார்*
*முத்திமழை பொழியும் முகில்வண்ணர் வந்தார்*
*மூலமென ஓலமிட வல்லார் வந்தார்*
*உத்தரவேதிக்குள்ளே உதித்தார் வந்தார்*
*உம்பர்தொழும் கழலுடையார் வந்தார் தாமே*

ஸ்ரீஹஸ்திகிரி என்கிற ஸத்யவ்ரத க்ஷேத்ரத்தில் எம்பெருமான் ஸ்ரீவரதன் திருவவதாரம் செய்த வரலாற்றையும், அதின் மாஹாத்ம்யத்தையும் உரைக்கும் மெய்விரதமான்மியம் எனும் ப்ரபந்தத்தில் ஸ்வாமி ஸ்ரீதேசிகன் அருளும் பாசுரம் இது. ஸூர்யனின் தேஜஸ் பகல்விளக்காகும்படி, ப்ரஹ்மா செய்த அச்வமேத யாகத்திலிருந்து வெளிக்கிளம்பிய பெரிய தேஜஸ்ஸில் மதிமயங்கி ஓடிய ப்ரஹ்மாவும் தேவர்களும் முனிவர்களும், மிக்க ச்ரமத்துடன் ஊன்றி நோக்கி, அந்த தேஜோமண்டலத்தின் நடுவிலே புண்யகோடி விமானத்தின் மத்தியில் ஒளி பொழியும் காளமேகம் போல் திருவவதரித்தருளிய ஸ்ரீவரதனைக் கண்டு ஆச்சர்யத்தால் பரவசமடைந்தனர். அச்சமயம் நித்யஸூரிகள் காளம், வலம்புரி என்கிற வாத்யங்களைத் தம் வாயினால் ஊதி அவன் பெருமையை எவ்வாறு வெளியிட்டனர் என்று இப்பாசுரத்தால் அநுபவிக்கிறார் ஸ்வாமி தேசிகன்.

இப்பாசுரத்தில் ஸ்ரீவரதனை அத்-திகிரி அருளாளப்பெருமாள் என்கிற திருநாமத்தைக் கொண்டு போற்றுகிறார் ஸ்வாமி தேசிகன். இதற்கு ‘அந்த திகிரி (அத்-திகிரி) அருளாளப்பெருமாள்’ என்று இங்கு தாத்பர்யம். ஏனெனில், இதற்கு முற்பாசுரத்திலேயே ‘பெருமையுடைய அத்திகிரிப் பெருமாள் வந்தார்’ என்று அத்திகிரி என்கிற அவ்வூரைக்கொண்டு அவனது அவதாரத்தை ஸ்தோத்ரம் செய்தார். ஆதலால், இப்பாசுரத்தில் மறுபடியும் அவ்வூரைக் கூறாமல், வேறோர் பொருளைத்தரும் ‘அந்த திகிரி (அத்-திகிரி) அருளாளப்பெருமாள்’ என்கிற தாத்பர்யார்த்தமே உசிதமாயும், அதிக ரஸாநுபவம் தருவதாயும் அமைந்துள்ளது.

‘அந்த’ திகிரி அருளாளப்பெருமாள் என்று ஸ்வாமி ஸாதிப்பதால், முதல் கேள்வி நமக்கு தோன்றுவது ‘எந்த’ திகிரி அருளாளப்பெருமாள்? என்பதாகும். அத்துடன், ‘அந்த’ திகிரி அருளாளப்பெருமாள் என்று ஒரு தொடர்ச்சியுடன் ஸ்வாமி இப்பாசுரத்தை ஆரம்பிப்பதால், முன்கூறிய அவனே மேலும் வேறு சிலகார்யங்களைச்செய்தான்என்றுகாட்டவிழைவது போல் அமைந்துள்ளது. மேலும், இலக்கணத்தைக் கொண்டு இத்திருநாமத்தைக் கூர்ந்து கவனித்தோமேயானால், ‘அருளாளப்பெருமாள்’ என்கிற பதம் ப்ரதானமான விசேஷ்யமாயும் (பெயர்ச்சொல்), திகிரி என்பது அதற்கு விசேஷணமாயும் (விவரிக்கப்படும் விஷயத்தின் பண்பைக் குறிக்கும் சொல்) அமைந்துள்ளது. ஆக, நம்முடைய இரண்டாவது கேள்வி, ஸ்வாமி தேசிகன், முன்கூறிய அந்த அருளாளப்பெருமாள் வேறு என்செய்தான் என்று சொல்ல விழைகிறார்? அதற்கு திகிரியான ஸுதர்சநாழ்வார் எவ்வாறு குணமாக இருந்து கொண்டு விசேஷ்யத்தின் சிறப்பை மேலும் ப்ரகாசிக்கச் செய்கிறார்? என்பனவாகும். இவ்விரு கேள்விகளுக்கான பதில்களைப் பார்ப்பதே இக்கட்டுரையின் லக்ஷ்யம்.

**முதல் கேள்விக்கான பதில்: ‘எந்த’ திகிரி அருளாளப் பெருமாள்?**

**...அருளாழிப்புள்கடவீர் அவர்வீதி ஒருநாளென்று**
**அருளாழியம்மானைக் கண்டக்கால் இதுசொல்லி...**

என்று திருவாய்மொழி முதல் பத்தில் (1-4-6), ஸ்ரீநம்மாழ்வார் தன்னைப் பராங்குச நாயகியாக பாவித்து நாயகனான எம்பெருமான் தன்னைக் காண வாராமையால் வண்டை நோக்கித் தூது செல்வதற்காக இறைஞ்சிப் பேசும் பேச்சு இது. **‘ப்ரதம சதகே வீக்ஷ்ய வரதம்’** என்று திருவாய்மொழியின் இப்பத்து முழுவதும் ஸ்ரீவரதன் விஷயமாகவே ஸ்ரீஆழ்வார் அநுபவிப்பதாக ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார்.

இங்கு ஸ்ரீஆழ்வார் ஸ்ரீவரதனை ‘அருளாழியம்மான்‘ என்கிறார். ஆச்ரிதர் விஷயத்தில் க்ருபையுடையனான திருவாழி ஆழ்வானையுடைய ஸ்வாமியைக் கண்டவளவிலே க்ருபை பண்ணி இந்நாயகியினுடைய ஆத்மாவின் நீர்மை உலர்வதற்கு முன்னமே க்ருபா ஸமுத்ரமான பெரிய திருவடியார் ஸ்ரீகருடன் மீதேறி ஸ்ரீகஜேந்த்ராழ்வான்

பக்கலிலே சென்று காத்தது போல் என் வீதியிலும் ஒரு நாள் நடத்தவேணுமென்று சொல்லிவரும்படி வண்டை நோக்கிப் பேசுகிறாள். இங்கு

அருள் சப்தமானது எம்பெருமானுக்கும் விசேஷணமாக உள்ளது; திருவாழி ஆழ்வானுக்கும் விசேஷணமாக அமைந்துள்ளது. திருவாய் மொழியின் ஈடு வ்யாக்யானத்தில் ஸ்ரீநம்பிள்ளை இவ்விஷயத்தை ரஸமாகக் காட்டியுள்ளார்:

1. ஆச்ரிதரான ஸ்ரீ கஜேந்த்ராழ்வான் போல்வார் பக்கலிலே க்ருபை பண்ணுவதால் எம்பெருமான் ஸ்ரீவரதன் அருளம்மான் - அருளாளன்.
2. அருளைத் தன் நிரூபக தர்மமாக உடையவர் திருவாழி ஆழ்வான் என்பதால் அவர் அருளாழி. ஸர்வேச்வரனும் கைக்குறிப்பு வாங்குவது திருவாழியிடம், அருள் கூடுகட்டி நிற்குமிடம் திருவாழி ஆழ்வான் என்றெல்லாம் ஸாதிக்கிறார்.

இப்படியாகப் பேருளாளரான இவ்வெம்பெருமானின் தயா ஸ்வபாவத்தையும், அவனது திருவருளை மேலும் மெருகேற்றும் அருளார் திருச்சக்கரத் தையும் ஒரு திருநாமத்தால் கொண்டாட எண்ணி, ஸ்ரீவரதனை 'அருளாழியம்மான்' என்கிறார் ஸ்ரீஆழ்வார். ஸ்ரீஆழ்வார் எந்த திகிரி அருளாளனை இப்பாசுரத்தால் பாடினாரோ, அந்த திகிரி அருளாளனையே 'அத் –திகிரி அருளாளாளப்பெருமாள்' என்று ஸ்வாமி தேசிகன் நித்யஸூரிகளின் துதியாக வர்ணிக்க ஆரம்பிக்கிறார்.

இரண்டாவது கேள்விக்கான பதிலின் அவதாரிகை:

அம்ருதரஞ்ஜனீ என்கிற தேசிக ப்ரபந்தத்தில், ச்ரிய:பதியான எம்பெருமான் இந்த ஜீவனுக்கு முதலில் தேஹத்தை அளித்துத் தானும் அதன் உள்ளேயே உறைந்து, பின்பு இவனுக்கு நற்கதி



அளிக்கச் செய்யும் அனைத்து உபகாரங்களையும் ஒரே பாசுரத்தில் அடுக்கி, அவனது அருள்மழை எவ்வாறு பொழிகிறது என்று காட்டுகிறார் ஸ்வாமி தேசிகன்.

*ஊன்தந்து நிலைநின்ற உயிரும்தந்து ஓர்*
*உயிராகி உள்ளொளியோடு உறைந்த நாதன்*
*தான்தந்த இன்னுயிரை எனதென்னாமல்*
*நல்லறிவும் தந்து அகலாநலமும் தந்து*
*தான்தந்த நல்வழியால் தாழ்ந்த என்னைத்*
*தன்தனக்கே பரமாகத் தானே எண்ணி*
*வான்தந்து மலரடியும் தந்து வானோர்*
*வாழ்ச்சிதர மன்னருளால் வரிந்திட்டானே.* [32]

இதில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு உபகாரத்தையும் ஸ்ரீ ஸுதர்சன ஆழ்வாரை தரித்திருக்கும் நம் அத்திகிரித் திருமால் எவ்வாறு நமக்கருள்கிறான் என்று பார்த்தோமேயானால், இத்-திகிரிஅருளாளன் நமக்குச் செய்யும் சேமத்துக்கு ஒப்பில்லை என்பதையும், இவனை இப்பெயர் கொண்டு ஸ்வாமி தேசிகன் போற்றும் காரணத்தையும் ஓரளவு நம்மால் புரிந்துகொள்ள இயலும்.

**இரண்டாவது கேள்விக்கான பதில்: ஆழ்வார் முன்கூறிய அந்த திகிரி அருளாளப்பெருமாள் மேலும் வேறு என் செய்தான்?**

**1. தான்தந்த இன்னுயிரை எனதென்னாமல்: ஆனைபரிதேரின்மேல் அழகர் வந்தார்**

நம்முள் கலந்த எம்பெருமான் தான்தந்த இன்னுயிரை எனதென்னாமல் என்னும்படி இவ்வாத்மா தானே ஸ்வதந்த்ரன் என்கிற ப்ரமையைப் போக்கி அவனுக்கே தாஸன் என்கிற நிலையை அடையச்செய்கிறான். இவ்வுபகாரத்தை நம்மத்திகிரித் திருமால் ஆனைபரிதேரின் மேல் அழகர் வந்தார் என்றபடி நமக்கருள்கிறார்.

இங்கு ஒரு ஸ்வாரஸ்யத்தைப் பார்ப்போம். பெருமாளுக்கு ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் **சுஷேண:** என்கிற திருநாமம் உள்ளது. நல்ல சைன்யத்தை (படை பலத்தை) உடையவன் என்பது இத்திருநாமத்தின் பொருளாகும். ஆனால் இதற்கு மிக அழகாக உரை அருளிய ஸ்ரீபராசர பட்டர், இத்திருநாமம் எம்பெருமானுக்கு ஸாமான்யமான படை பலத்தைக் கூற வரவில்லை, அத்யாச் சர்யமான திருமேனி சோபையாகிற சைன்யத்தை உடையவன் என்று கூறவந்ததாக ஸாதிக்கிறார். மற்றவர்கள் படை பலத்தைக் கொண்டு மாற்றாரை மாற்றுவர், ஆனால் எம்பெருமானோ தன் திருமேனி

அழகாகிய சைன்யத்தைக் காட்டியே எல்லோரையும் தன் வசப்படுத்தித் தனக்கு அடிமைத் தொழில் செய்யும்படி அருள்வானாம். இதையே ஸ்ரீவரதன் பல வாஹனங்களில் பல ப்ரகாரம் கையில் நேமியை ஆயுதமாகக் கொள்ளாமல் ஆபரணமாகக் கொண்டு எழுந்தருளி அவன் சோபையிலே நம்மை மயக்கி அவனுக்கு தாஸர்கள் ஆக்குகின்றான். ஸ்வாமி தேசிகன், ஸ்ரீவரதராஜ பஞ்சாசத் ஸ்தோத்ரத்தில் **துரக விஹகராஜ** என்று ஸ்ரீவரதன் குதிரை நம்பிரான், ஸ்ரீகருடாழ்வார், பல்லக்கு போன்ற வாஹனங்களின் மீதேறி வந்து தன் ஸௌந்தர்யத்தால் தானே ஸர்வேச்வரன் என்று லோகத்தாருக்கு உணர்த்தி, கண் இமைக்காமல் அவ்வழகிலே ஈடுபடச் செய்து, அவனுக்கு அடிமைத்தொழில் செய்யவைக்கிறான் என்கிறார்.

**2. நல்லறிவும் தந்து: கச்சிதனில் கண்கொடுக்கும் பெருமாள் வந்தார்**

ச்ரிய:பதியான ஸர்வேச்வரன் ஒருவனுக்கே தாஸனான பின்பு, நல்லறிவும் தந்து என்கிறபடி அவனை அடையும் வழிகளைக் காட்டி, அதிலும் மிக உயர்ந்ததான சரணாகதி ஜ்ஞானத்தை ஆசார்யனாக அருள்கிறான் எம்பெருமான் என்கிறார் அம்ருதரஞ்ஜனீயில். **பஜத வித்யா நிவர்த்தன** என்று அடியவர்களின் அஜ்ஞானத்தை போக்கும் ஜ்ஞான ஸ்வரூபனான திருச் சக்கரத்தை ஏந்தியுள்ள ஸ்ரீவரதனோ, கச்சிதனில் கண்கொடுக்கும் பெருமாள் வந்தார் என்றபடி அவனை ஆச்ரயித்தவர்களின் அஜ்ஞானத்தைப் போக்கி **அஹமேவ பரம் தத்வம், உபயேஷு ப்ரபத்தி ஸ்யாத்** என்றெல்லாம் சரணாகதி மார்க்கத்தை அருளி ஜ்ஞானத்தைக் கொடுக்கிறான். கண் என்கிற பதத்துக்கு இங்கு ஜ்ஞானம் என்று பொருள். ஸ்ரீகூரத்தாழ்வான் சோழ ராஜனால் தம் கண்களை இழந்த ஸமயம், ஸ்ரீவரதன் ஜ்ஞானத்தையே கண்களாக அவருக்கு அருளிய வ்ருத்தாந்தம் இங்கு அநுஸந்தேயம்.

**3. அகலாநலமும் தந்து: கருத வரம்தரும் தெய்வப்பெருமாள் வந்தார்**

இப்படிப்பட்ட ப்ரஹ்ம ஜ்ஞானிகளின் அநிஷ்டங்களைப் போக்கி அகலா நலமும் தந்து எம்பெருமான் உபகாரம் செய்கிறான் என்கிறார் அம்ருதரஞ்ஜனீயில். அவ்வாறே விபுத ஸங்கல்ப கல்பக என்று தன் பக்தர்களுக்குகற்பகத்தருவாயுள்ள அருளார் திருச்சக்கரத்துடன் வரம் தரும் மணிவண்ணனாக **(வரம் ததாதி இதி வரத:)** எழுந்தருளியுள்ள ஸ்ரீவரதனைக் கருத வரம்தரும் தெய்வப்பெருமாள் வந்தார் என்று கொண்டாடுகிறார் நம் ஸ்வாமி. ஸ்ரீஆளவந்தார் **யஸ்ய ப்ரஸாத கலயா பதிர: ச்ருணோதி** என்று ஆதியுகத்து அயன் கண்டிடநின்ற அருள் வரதரின் வரம்தரும் வைபவத்தை மங்களாசாஸனம் செய்தருளிய வ்ருத்தாந்தம் இங்கு அநுஸந்தேயம்.

**4. தான்தந்த நல்வழியால் தாழ்ந்த என்னை: முத்திமழைபொழியும் முகில்வண்ணர் வந்தார்**

பின்பு, தான்தந்த நல்வழியால் தாழ்ந்த என்னை என்று அவனை அடையும் உபாயத்தைச் செய்வித்து அருள்கிறான் என்று இவன் செய்யும் உபகாரத்தைப் பட்டியலிடுகிறார். இதே உபகாரங்களைக் கையும் திருவாழியுமாய்க் கொண்டு ஆள்கின்றான் ஆழியான், இனி மீள்கின்றதில்லை என்றவாறு மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அருளும் ஸ்ரீவரதனை

| மார்கழியில் முக்கிய உத்ஸவங்கள் |
| --- |
| **தநுர் மாத ஆராதனம் ஆரம்பம்**<br>டிஸம்பர் 16 (செவ்வாய்)<br>**தினமும் மாலை திருப்பாவை உபந்யாஸம்** |
| **ஹனுமத் ஜயந்தி,**<br>**தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருநக்ஷத்ரம்**<br>டிஸம்பர் 19 (வெள்ளி) |
| **பகல்பத்து சாற்றுமுறை**<br>டிஸம்பர் 29 (திங்கள்) |
| **வைகுண்ட ஏகாதசி, இராப்பத்து தொடக்கம்**<br>டிஸம்பர் 30 (செவ்வாய்) |
| **ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் (10 நாட்கள்)**<br>ஜனவரி 5 (திங்கள்) முதல் 14 (புதன்) வரை |
| **இராப்பத்து சாற்றுமுறை, நம்மாழ்வார் திருவடித்தொழல்**<br>ஜனவரி 8 (வியாழன்) |
| **இயற்பா சாற்றுமுறை**<br>ஜனவரி 9 (வெள்ளி) |
| **தேசிக ப்ரபந்த சாற்றுமுறை**<br>ஜனவரி 10 (சனி) |
| **பல்லாண்டு தொடக்கம்**<br>ஜனவரி 12 (திங்கள்) |
| **போகி உத்ஸவம்**<br>ஜனவரி 14 (புதன்) |

முத்திமழை பொழியும் முகில்வண்ணர் வந்தார் என்று போற்றுகிறார் ஸ்வாமி.

ஸ்ரீவரதன், அடியாரானார்க்கு இத்தனை இரங்கி அருள்வதற்கானக் காரணத்தையும் ஸ்வாமி தேசிகன் வேறோரிடத்தில் நமக்குத் தெளிவிக்கிறார். யதிராஜ ஸப்ததியில், கருணைக் கடலாம் ஸ்ரீபாஷ்யகாரர் கொணர்ந்து கொடுத்த சுத்த நீரை பருகியதாலேயே **(பீத்வா விசுத்தம் பய:)** இன்றும் காஞ்சீ கரிகிரியில் ஓர் காளமேகம் கேட்டதற்கும் மேலாகப் பலன்களைப் பொழிகிறது **(காலே ந: கரிசைல க்ருஷ்ண ஜலத: காங்க்ஷாதிகம் வர்ஷதி)** என்கிறார். இங்கு ஸ்வாமி உபயோகித்துள்ள பதங்களின் ஸ்வாரஸ்யத்தைப் பார்த்தோமேயானால் இப்புதிரும் புரிதலாகும். மழைபொழியும் கரிகிரியின் காளமேகம் என்கிற ஸம்ஸ்க்ருத பதங்களுக்கு முத்தி மழைபொழியும் முகில்வண்ணர் (கருமேகம்) என்று தமிழில் பாசுரமிடுகிறார்.

**5. தன்தனக்கே பரமாகத் தானே எண்ணி: மூலமென ஓலமிட வல்லார் வந்தார்**

தன்னை ஒருக்காலே சரணாக அடைகின்றாரின் பரத்தைத் தன் பரமாகத் தானே எண்ணித் தீங்கேதும் வாரா வண்ணம் அவர்களை எப்பொழுதும் ரக்ஷிக்கும் ஸ்ரீவரதனை 'மூலமென ஓலமிட வல்லார் வந்தார்' என்கிறார் ஸ்வாமி. ஸ்ரீஆழ்வார் ஸாதித்தபடிக்கு அருள் ஆழியுடன் சென்று ஸ்ரீகஜேந்த்ராழ்வாரை ஆபத் காலத்தில் காத்த சரித்ரத்தை நமக்குரைத்து இவ்வுபகரத்தை விளக்குகிறார். ஸ்ரீகாஞ்சீ திவ்யதம்பதிகளையே கதியாகக்கொண்ட இளையாழ்வார் ஸ்ரீபாஷ்யகாரருக்கு சிறுவயதில் யாதவப்ரகாசரால் ஏற்பட்ட ஆபத்திலிருந்து அவரை ரக்ஷிக்க ஸ்ரீவரதனும் ஸ்ரீபெருந்தேவித் தாயாரும் வேடுவர்கோலம் பூண்டு எழுந்தருளிய வ்ருத்தாந்தமும் இங்கு அநுஸந்தேயம்.

**6. வான்தந்து, மலரடியும் தந்து: உத்தரவேதிக்குள்ளே உதித்தார் வந்தார், உம்பர்தொழும் கழலுடையார் வந்தார் தாமே**

முடிவில், அந்தமிலாப்பேரின்பமான ஸ்ரீவைகுண்டத்தையும் தந்து, அங்கு அநவரதம் கைங்கர்யம் செய்யும்படிக்கு அதிபோக்யமான தன் மலரடியும் தந்து வானோர் வாழ்ச்சிதர மன்னருளால் வரிந்திட்டானே என்று எம்பெருமான் அநுக்ரஹிக்கும் உபகாரத்தை ஸ்மரிக்கிறார் ஸ்வாமி. ஸத்யவ்ரத க்ஷேத்ரத்தில் உத்தர வேதிக்குள்ளே உதித்த ஸ்ரீவரதனோ, 'உமதடிகள் அடைகின்றேன் என்று ஒருகால் உரைத்த சரணாகதர்களுக்கு அஞ்சல் எனக் கரம் வைத்துத் தமதனைத்தும் (தம் ஐச்வர்யங்களான ஸ்ரீவைகுண்ட நித்ய விபூதி, தம் மலரடி, கைங்கர்ய ஸாம்ராஜ்யம் என்று வானோர்களான நித்யஸூரிகளும் முக்தர்களும் அநுபவிக்கும் போகம் எல்லாவற்றயும்) வழங்கியருள்கிறான் என்கிறார் ஸ்வாமி தேசிகன். அதோடு மட்டும் நில்லாமல், **'அத்திகிரி பத்தர் வினை தொத்தறவறுக்கும் அணி அத்-திகிரியே** என்று திருக்கையிலே ஏந்தியுள்ளத் திருச்சக்கரத்தைக் கொண்டு அவனை ஆச்ரயித்திருக்கும் பக்தர்களின் வினைகளை வேரறுத்து, இவ்வுலகில் இருக்கும் காலத்திலேயே தன் அர்ச்சாவதார திவ்ய மங்கள விக்ரஹத்தைக் காட்டி, அவன் சோபையிலே மயக்கி, இந்த அருள் வரதன் நிலையான தன் திருவடி இலக்கில் அம்பு போன்று அமிழவைத்து, உயர்ந்த பாகவத ஸம்ச்லேஷம், பகவத் பாகவத கைங்கர்யம் என்றெல்லாம் வைகுண்ட மாநகரில் கிடைக்கும் அவ்வநுபவத்தை இங்கேயே அளிக்கின்றானாம். இவ்விஷயத்தை ஸ்ரீவரதராஜ பஞ்சாசத்திலே **த்வம் சேத் ப்ரஸீதஸி..., ...வைகுண்டவாஸேऽபி நமேऽபிலாஷ:** என்றெல்லாம் விஸ்மயிக்கிறார் ஸ்வாமி தேசிகன். உம்பரானவர் ஸ்ரீவைகுண்டத்தில் தொழும் மலரடிகளை, ஸ்ரீகாஞ்சியிலேயே நமக்கு அருள்கிறான் ஸ்ரீவரதன் என்பதை ''உம்பர் தொழும் கழலுடையார் வந்தார் தாமே'' என்று தலைக்கட்டுகிறார் ஸ்வாமி தேசிகன்.

இவ்வாறாக நம் இரண்டாவது கேள்விக்கான பதிலாக, அம்ருதரஞ்ஜனீயில் கூறியுள்ளபடி எம்பெருமான் நமக்குச் செய்யும் உபகார க்ரமத்தை, ஒன்று விடாமல் அனைத்தையும் ஸ்ரீஸுதர்சனாழ்வானைக் கையிலேந்தியுள்ள ஸ்ரீபேரருளாளன் நமக்கு அருள்கிறான் என்று எடுத்துரைத்தார். ஆக, இன்று கரிகிரி மலையில் நமக்கு அருளும் அத்-திகிரி அருளாளன் அன்று ஸ்ரீநம்மாழ்வாருக்கு அநுக்ரஹித்த அருளாழி அம்மானே என்றும், அவன் மேலும் செய்த உபகாரங்களையும் நித்யஸூரிகளின் திருவாக்கால் கொண்டாடுகிறபடியைக் காட்டி அருள்கிறார் ஸ்வாமி தேசிகன்.

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:

# எம்பெருமானின் திருக்கல்யாண குணங்கள்

**ஸ்ரீமதி இந்திரா ரமேஷ், பெங்களூரு**

ஸ்ரீமந்நாராயணின் குணங்கள் எண்ணில் அடங்கா. எம்பெருமானின் குணங்களைப் பற்றி விசேஷித்து மஹநீயர்கள் பலர் பலவாறு அனுபவித்துள்ளனர். குறிப்பாக ஆழ்வார்கள் தங்கள் பாசுரங்களில் அவனது சீரிய குணங்களிலேயே மனமுருகி லயித்தனர். அவற்றில் மிகச் சிறப்பு வாய்ந்தவைகளை இங்கு காண்போம்.

**பரத்வம்**

ப்ரஹ்மாதி தேவர்கள் போன்றோர்களும் ஸ்ரீமந்நாராயணனின் தாள் பற்றி சரணாகதியை அனுஸந்திதவர்கள். ஸ்வாமி நம்மாழ்வார் தனது முதலாம் பத்து, முதல் திருவாய்மொழியில்,

*உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்*
*மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்*
*அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்*
*துயரறு சுடரடி தொழுதெழு என் மனனே!*

என்று பரத்வத்தின் ஸாரத்தை அனுபவித்துத் தொடங்குகிறார்

அதுபோல ஏழாம் பாசுரத்தில்,

*திடவிசும்பெரிவளி நீர் நிலமிவைமிசை*
*படர்பொருள் முழுவதுமாய் அவையவைதொறும்*
*உடல்மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்துளன்*
*சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே.*

என்று அவனே அனைத்திற்கும் மேன்மையானவன், அனைத்திற்கும் இருப்பிடம், அனைத்திலும் இருப்பவனும் அவன் ஒருவனே. அவனே ஸ்ரீமந்நாராயணன் என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டு இருப்பது பெருமாளின் முதல் குணமான பரத்வத்தின் மேன்மையைப் பகர்கிறது.

**ஸௌலப்யம்**

எளியவர்களான நம் போன்றோர்களும் அவனை எளிதில் அணுகி மோக்ஷத்தை பெற்றுக் கொள்ளக் கூடிய அளவிற்கு எளிமையானவன்.

எம்பெருமான் நம் பொருட்டு ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து கீழே இறங்கி அவதரித்து நம்மில் ஒருவனாய் வாழ்ந்து காட்டியுமுள்ளான். அவன் எங்கும் வ்யாபித்து அந்தர்யாமியாய் இருக்கிறான்.

இந்த குணத்தையும் ஸ்வாமி நம்மாழ்வார் முதல் பத்து மூன்றாம் திருவாய்மொழி முதல் பாசுரத்தில்,

*பத்துடை அடியவர்க்கெளியவன் பிறர்களுக்கரிய*
*வித்தகன் மலர்மகள் விரும்பும் நம்*
*அரும்பெறலடிகள்*
*மத்துறு கடைவெண்ணெய் களவினில்*
*உரவிடையாப்புண்டு*
*எத்திறம் உரலினோடு இணைந்திருந்தேங்கிய*
*எளிவே.*

என்று க்ருஷ்ணாவதாரத்தில் அவனது ஸௌலப்யம் கண்டு வியந்து ஆறு மாதம் மயங்கி இருந்தாராம்.

திருமங்கையாழ்வாரும்,

*ஏழை ஏதலன் கீழ்மகனென்னாது இரங்கி*
*மற்றவர்க்கு இன்னருள் சுரந்து*
*மாழைமான் மடநோக்கி உன்தோழி உம்பி*
*எம்பியென்றொழிந்திலை உகந்து*
*தோழன் நீயெனக்கு இங்கொழியென்ற சொற்கள்*
*வந்து அடியேன் மனத்திருந்திட*
*ஆழிவண்ண! நின்னடியிணையடைந்தேன்*
*அணிபொழில் திருவரங்கத்தம்மானே.*
(பெரிய திருமொழி 5-8-1)

என்று இராம அவதாரத்தில் ஸ்ரீ ராமனின், ஸௌலப்யம் பற்றிக் கூறுகிறார். சரணகதி பண்ணுவதற்கு ஏற்றவனும் மோக்ஷம் அளிக்க வல்லவனும் அவன் ஒருவனே என்பதை உணர்த்தவே அவனது பரத்வ மற்றும் ஸௌலப்ய குணங்கள்.

திருமங்கை ஆழ்வார் பெரிய திருமொழி பதினொன்றாம் பத்து ஐந்தாம் திருவாய்மொழி முழுவதும், ஸௌசீல்யம் மற்றும் ஸௌலப்யமே ஏற்றம் என்று முதல் இரு வரிகளிலும், பரத்வமே சிறந்தது என்று இறுதி இரு வரிகளிலும் எடுத்துரைப்பது போல் அமைத்துள்ளர்.

உதாராணத்திற்கு,

*கள்ளத்தால் மாவலியை மூவடிமண்*
*கொண்டளந்தான்*
*வெள்ளத்தான் வேங்கடத்தான் என்பரால் காணேடீ!*
*வெள்ளத்தான் வேங்கடத்தானேலும் கலிகன்றி*
*உள்ளத்தினுள்ளெ உளன் கண்டாய் சாழலே!*
(பெரிய திருமொழி 11-5-10)

**ஸ்வாதந்த்ரயம்**

காருண்ய கல்யாண குணங்கள் இல்லாதிருந்தால், நம் பாப புண்யங்களை ஆராய்ந்து அதன் விளைவாய் மோக்ஷத்தை அளிக்காத் தன்மையை ஏற்படுத்தும் நிலைமை. ஆனால் அவன் பரம காருணிகன் ஆயிற்றே.

ஒரு வேளை ஜீவன் ஒருவன் சரணடைந்து, அப்படி ஒரு மறைநிலை காரணமாக ஸ்ரீமந்நாராயணன் மோக்ஷம் தராவிட்டால், அந்த ஜீவனின் நிலை?

அதற்கும் பிராட்டியின் புருஷகாரம் துணை புரிகிறது. தாயார் அந்த ஜீவனுக்காக மோக்ஷத்தைப் பெற்றுத் தந்திடுவாள்.

அதனால் தான் ரஹஸ்ய-த்ரயத்தில் ஸ்ரீயுடன் கூடிய த்வயத்திற்கே ஏற்றம் அதிகம்.

ஸ்வாமி தேசிகனும் தனது தயாசதகத்தில் தாயாரின் இந்த காருண்ய குணத்தைப் பற்றிச் சிறப்பாய்க் கூறி உள்ளார்.

**வாத்ஸல்யம**

தாய்ப் பசு பிறந்தவுடன் தன் கன்றினை, அழுக்கு படர்ந்து இருப்பினும் தன் நாக்கினால் தடவி சுத்தம் செய்யுமாம். அது போலவே பகவான். நமது குற்றங்களைக் கண்டு தண்டிக்காமல் நம்மை ஏற்றுக் கொண்டு ரக்ஷிப்பதே நம்மைப் போன்ற அடியார் மனதை ஈர்க்கும் அவனது குணம்..

வடமொழியில் வத்ஸல என்றால் பசு என்று பொருள். குற்றங்களைக் கண்டு தண்டிக்காமல் பரிவுடன் நம்மை ரக்ஷிப்பதால் இந்த குணம் வாத்ஸல்யம் என்றாயிற்று.

தொண்டரடிபொடி ஆழ்வார் தனது திருமாலையில்,

*மனதிலோர் தூய்மையில்லை வாயிலோரின்*
*சொலில்லை*
*சினத்தினால் செற்றம் நோக்கித்*
*தீவளிவிளிவன்வாளா*
*புனத்தழாய் மாலையானே! பொன்னிசூழ்*
*திருவரங்கா!*
*எனக்கு இனிக் கதியென் சொல்லாய்?*
*என்னையாளுடைய கோவே! [30]*

*தவத்துளர் தம்மில்லேன் தனம் படைத்தாரில்லேன்*
*உவர்த்த நீர்போல் எந்தன் உற்றவர்க்கு*
*ஒன்றுமல்லேன்*
*துவர்த்த செவ்வாயினார்க்கெ துவக்கறத் துரிச*
*னானேன்*
*அவத்தமே பிறவி தந்தாய் அரங்க மாநகருளானே!*
*[31]*

என்று இத்துணை சிறுமை தன்பால் இருந்தும் தனது வாத்ஸல்ய குணத்தினால் அரவணைத்தான். அவனே அரங்கன் என்று நெகிழ்கிறார்.

நிகரில்லா சொத்தை உடை பகவான். இந்த மொத்த விபூதிக்கும் அவனே ஸ்வாமி. நாம் ஒரு கார்யத்தை நினைத்து அவன் முன் வேண்டி நின்றால் உடனே நடத்திக்கொடுக்கக் கூடியவன்.

**ஸர்வ சக்தித்வம்**

*உள்ளத்தே உறையும் மாலை உள்ளுவார்*
*உணர்வொன்றில்லாக்*
*கள்ளத்தேன் நானும் தொண்டாய்த் தொண்டுக்கே*
*கோலம்பூண்டு*
*உள்ளுவார் உள்ளிற்றெல்லாம் உடனிருந்து*
*அறிதியென்று*
*வெள்கிப்போய் என்னுள்ளே நான் விலவறச்*
*சிரித்திட்டேனே. [34]*

இது நைச்சியானுஸந்தானமாய் பாடப்பெற்ற திருமாலைப் பாசுரம்.

‘‘ஒவ்வொருவர் நெஞ்சிலுமே நிலைத்திருக்கும் பகவானை, மனத்தால் நினைப்பதற்கு வேண்டிய அறிவு சிறிதும் இல்லாதவனாய் இருந்த நான், உனக்குஆட்செய்யுமவனாய்வேஷங்களைத்தரித்து இருந்தும், மனதில் நினைப்பவர் நினைப்பவை யாவற்றையும் கூடவே இருந்து நீ அறிகிறாய் என்பதை அறிந்து வெட்கமுற்று உன்னை விட்டுச்சென்று நீ இருக்கும் என் மனத்தினுள்ளேயே விலா எலும்பு ஒடியும்படி சிரித்துக் கொண்டேன்’’ என்பது ஆழ்வாரின் கூற்று.

தான் எத்துணை தாழ்மையுடையனாய் இருந்தாலும் தன்னுள்ளே இருந்து தன்னைக் காக்கும் அவனது ஸ்வாமித்வத்தையும் ரக்ஷகத்தையும் எண்ணி ச்லாகிக்கிறார் தொண்டரடிப்பொடிகள்.

ஸ்வாமி நம்மாழ்வார் கண்ணனின் கோவர்தன கிரி வைபவம் பற்றிக் கூறுகையில், அந்தக் கண்ணன் சென்றடைந்த திருமலையை ஸேவித்தாலே போதும், அவனது அருள் பெறலாம் என்று மகிழ்கிறார்.

*குன்றமேந்திக் குளிர்மழை காத்தவன்*
*அன்று ஞாலம் அளந்தபிரான் பரன்*
*சென்றுசேர் திருவேங்கட மாமலை*
*ஒன்றுமே தொழ நம்வினை ஓயுமே.*
(திருவாய்மொழி 3-3-8)

**ஸௌசீல்யம்**

எம்பெருமான் தனது மேன்மை பாராமல் மற்றும் நமது சிறுமை பாராமல் நம்முடன் கலந்திருப்பதே இந்த குணம். பூர்ணாவதாரங்களான ராம, க்ருஷ்ணாவதாரங்களில் பகவான் அங்ஙனமே இருந்தான் என்பதனால் அனைத்து ஆழ்வார்களும் இந்த குணத்தில் ஆழங்கால் பட்டனர்.

ஸகல ஜ்ஞானமும் கொண்ட இவனே ஸர்வஜ்ஞன். நினத்ததை எதையும் செய்ய வல்லவன் அவன். ஸர்வ சக்தன். நினைத்தால் க்ஷணத்தில் வைகுண்டம் சேர்ப்பவன்.

குறையேதுமற்ற குணங்களை உடையவன் நம்மிடம் அவன் எதிர்பார்ப்பது ஒன்றும் இல்லை. தானே உபாயமாக இருந்து மோக்ஷத்தை அளிப்பவன். இத்தகைய பெருமைமிகு திருக்கல்யாண குணங்களை நாம் அனுபவித்து என்றும் அவன் தாள் பற்றி உய்வோமாக!

ஸ்ரீ:

# Important Tenets Of Our Sampradaya (33)

## The 'Dust On The Devotees' Feet' That Was Oblivious To All But Arangan

**Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore**

Vipranarayana was his given name and he came to be famously known as Thondar AdipPodi Azhwar. The name translates into 'Bhakthaangri Renu' in Sanskrit as mentioned in the Thaniyans of Aala Vandhaar (Bhutham Sarascha) and Thirumaalai Aandaan (Thamevamathvaa). It is Thondar + Adi + Podi in Tamil and Bhaktha + Angri + Renu in Sanskrit, meaning the 'Dust on the Devotees' Feet'. If his devotion to Lord Ranganatha is legendary, his unswerving fidelity to the Lord's devotees is exemplary.

Thondar AdipPodigal composed two Prabandhams — ThirupPalli Ezhuhchi (10 Paasurams) and Thirumaalai (45), both on Arangan. Interestingly, he is the only Azhwar who has not looked beyond a single deity. None but Arangan mattered to him. He remained oblivious to everything else. It may be mentioned here that even ThirupPaan Azhwar, who was taken in by the splendour of Arangan's form and sang 'Amalandaadhi Piraan', mentions Venkatam in it as a passing reference.

Thondar AdipPodi Azhwar was born at Thirumandangudi in Chola Naadu, on a Prabhava-Maargazhi-Kettai day, as the manifestation of Lord Sriman Narayana's Vaijayanthi Vanamaala. His Thirunakshathram falls this year on December 19. Let us reflect for a moment on his devotion to the Lord and His devotees through 'Thirumaalai', the 'Garland of Verses'. There is this popular saying "திருமாலை அறியாதார் திருமாலை அறியாதார்' punning on the words 'மாலை' meaning garland and 'மால்' denoting the Lord (Thirumaal). It means that those who are not familiar with the Prabandham 'Thirumaalai' have not known the Lord. Conversely, those who have learned 'Thirumaalai' have understood the Lord well.

The style and substance of the Prabandham make for compelling study. The Azhwar apparently is a non-believer of half-measures and subtlety. There is total finality in what he has to say. A distinct stamp of forthrightness, in the tone of 'take it or leave it' born out of absolute conviction, can be seen all through the work. In fact, there is a liberal dose of admonishment and even self-deprecation.

We shall take a peek into some of the highlights:

**Paasuram No. 2: Nothing else is more appealing than the experience of admiring Him**



பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே!

"O, Lord of Aranga Maanagar with the hue of a huge green mountain! Lord of coral lips, lotus-red eyes, Achyutha! Lord of Celestials and Cowherd-Lord! — depriving the joy of admiring You thus, if I were given the opportunity to rule Paramapadham, I shall not want it."

**Paasuram No. 3: Not desirous of any more birth as it is nearly a waste**

வேதநூல் பிராயம் நூறு மனிசர்தாம் புகுவரேலும்
பாதியும் உறங்கிப் போகும் நின்றதில் பதினையாண்டு
பேதை பாலகனதாகும் பிணி பசி மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமாநகருளானே!

"O, Lord of Aranga Maanagar! Even if one were to get the lifespan of a hundred years as mentioned in the Vedas, one half of that will be lost in sleeping; ignorant childhood and youth will take away plenty of years of the rest; disease, hunger, old age and distress will take their toll too. Hence, I shall not desire birth anymore."

**Paasuram No. 10: There is no god other than Him**

மற்றும் ஓர் தெய்வம் உண்டே? மதியிலா மானிடங்காள்!
உற்றபோதன்றி நீங்கள் ஒருவனென்று உணர மாட்டீர்
அற்றமேல் ஒன்றறீயீர் அவனல்லால் தெய்வமில்லை
கற்றினம் மேய்த்த எந்தை கழலிணை பணிமினீரே.

"Can there be another god? O, mindless men! Unless there is a disaster, you will never realise that He (Sriman Narayana) is the Lord. You do not know the Saastras (which say) other than Him, there is no god. Worship the feet of my Lord who grazed cows!"

**Paasuram No. 12: The greatness of His names**

நமனும் முற்கலனும் பேச நரகில் நின்றார்கள் கேட்க
நரகமே சுவர்க்கமாகும் நாமங்களுடைய நம்பி
அவனதூர் அரங்கமென்னாது அயர்த்து வீழ்ந்தளிய மாந்தர்
கவலையுள் படுகின்றாரென்று அதனுக்கே கவல்கின்றேனே.

"His names are so great that when the inmates of Hell heard them from the conversation between Yama and Mudgala, even Hell became Heaven. (But) even good men forget that He resides in Arangam and keep worrying! That, in fact, has me worried."

**Paasuram No. 14: Outraged by non-utterance of the name Thiruvarangam**

வண்டினம் முரலும் சோலை மயிலினம் ஆலும் சோலை
கொண்டல்மீதணவும் சோலை குயிலினம் கூவும் சோலை
அண்டர்கோன் அமரும் சோலை அணி திருவரங்கமென்னா
மிண்டர் பாய்ந்துண்ணும் சோற்றை விலக்கி நாய்க்கிடுமினீரே.

"It lies amid groves where bumble bees hum, groves where peacocks dance, groves where gathering clouds lay low, and groves where cuckoos coo (sweetly)! Take away the food gobbled up by those ungrateful idiots who do not utter the name of the beautiful Thiruvarangam, and toss it up to the dogs!"

**Paasuram No. 29: Pleading with Krishna for refuge, in helplessness**

ஊரிலேன் காணியில்லை உறவும் மற்றொருவரில்லை
பாரில்நின் பாதமூலம் பற்றிலேன் பரம மூர்த்தி!
காரொளி வண்ணனே! கண்ணனே! கதறுகின்றேன்
ஆருளர்க் களைகண் அம்மா! அரங்கமா நகருளானே!

"O Supreme Lord, I have no place of my own in this world, nor any property; I have neither relatives nor friends. I have not secured your feet (as refuge). O Dark-hued radiant Lord! KrishnaI, I wail (calling You helplessly). Who is there to protect me (but for You)? O Lord of Aranga Maanagar!"

**Paasuram No. 33: Self-deprecation even while longing for His grace**

மெய்யெல்லாம் போகவிட்டு விரிகுழலாரில் பட்டு
பொய்யெல்லாம் பொதிந்து கொண்ட போழ்க்கனேன் வந்து நின்றேன்
ஐயனே! அரங்கனே! உன் அருளென்னும் ஆசை தன்னால்
பொய்யனேன் வந்து நின்றேன் பொய்யனேன் பொய்யனேனே.

"O Lord of Arangam! I am devoid of honesty, a flirt who succumbed to the charms of coiffured dames, and an impious soul steeped in deceit. Wishing for Your grace alone, I have come to You now. A pretender — false in mind, word, and deed — I stand before You, shameless, with nowhere else to go."

**Paasuram No. 44: Yearning for the Lord's empathy and grace**

பெண்ணுலாம் சடையினானும் பிரமனும் உன்னைக்காண்பான்
எண்ணிலா ஊழி ஊழி தவம் செய்தார் வெள்கி நிற்ப
விண்ணுளார் வியப்ப வந்து ஆனைக்கு அன்று அருளையீந்த
கண்ணறா! உன்னையென்னோ? களைகணாக் கருதுமாறே.

"The one with matted locks where Ganga strolls, and Brahma perform penance for countless ages to see You, but bow their head in shame (in being unsuccessful). In yore, taking the celestials by surprise, You came with concern and showered Your grace on an elephant. (Because You have not shown compassion towards me) O, merciless! How then can You be deemed as refuge?"

*(to be continued…)*


## ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில்,
ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் 'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்' இயங்கி வருகிறது.




முகவரி மற்றும் விவரங்களுக்கு:
**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை – 600004. போன்: 044 – 4322 9401.

**நிர்வாகம்: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை – 600004.**

ஸ்ரீ:

# Srimath Rahasya-Thraya Saaram

## A Manual For Beginners (33)

**Smt. Padmalatha Sridharan, Chennai**

**Chapter – 32**

**Nigamana Adhikaram**

In this final chapter, Swami Desikan recapitulates the concepts explained in all the 32 chapters.

1. That this Jeeva is entitled to Poorna Bhagavath Anubhavam in Srivaikuntam along with Nithyasuris, but having lost it due to his karmas and being in this samsaaram, attains a Sadacharyan and starts to learn about Thathvam, Hitham and Purushartham;
2. That the Rahasya-thraya are the choicest essence of all Pramaanaas;
3. That the unique concept of our sampradaya to be learnt is our Sareera-Athma Bhavam with Paramathma;
4. That our Purvacharyas have shown us Artha-Panchakam in the Rahasyas to be learnt;
5. That the three Thathvas are most important to be differentiated and learnt among the Archa-Panchakam;
6. That Sriya: Pathi is held up as the Isvara in Artha-Panchakam as per Sasthras;
7. That a person who has learnt the three Thathvas becomes a Mumukshu (one who desires Moksham);
8. That Mumukshus are divided as per their Adhikaram;
9. That Adhikaris have to perform different means as per their Adhikaram;
10. That the Svatantra Prapatthi Nishtan among the Adhikaris has special Adhikaram,, namely Aakinchanyam, etc.;
11. That the Prapatthi, which is a one-time function, has five constituents or angams;
12. That the Sasthraic method of Bharanyasam is to be followed with five angams;
13. That the Prapanna, who has surrendered the responsibility of his Athma to Bhagavan, the protector, is the accomplished one;
14. That he could detect from the signs that he has Nishtai and thus be sanguine;
15. That he has to remain in this world till his requested time of ascension because of the differentiation in the despairing of Samsaara, and till that time he has to do Kainkaryams suitable to his Svarupa;
16. That the cornerstone of Bhagavath Kainkaryam is Bhagavatha Kainkaryam;
17. That Bhagavan is pleased with Kainkaryams done according to Saasthraic norms only;
18. That the Prapanna should not commit misdeeds, and if they happen, methods to mitigate their adverse effects;
19. That the abode should be a Bagavath kshetram, to facilitate Kainkaryams;
20. That the ascent from the Sareeram for this Prapanna at the requested time is ensured by the sankalpam of Bhagavan, without any impediments;
21. That Bhagavan carries the Prapanna off in Archiradhi gathi like a king taking his son for coronation;
22. That the Prapanna experiences Poorna Brahmam and does Kainkaryam as an outlet for his overwhelming affection;
23. That Bhagavan is the main Sidhdhopayam;
24. That Sadhyopayam is the main doable means;
25. That the Upaaya’s greatness is not over-estimated to ascribe to it extraordinary powers not accepted by Sasthras;
26. That the Upaaya’s greatness is not under-estimated to create doubts on its ability;
27. The etymology and import of words and letters in Ashtakshara;
28. The etymology and import of words and letters in Dvayam;
29. The etymology and import of words and letters in Charama Slokam;
30. The conduct of the Acharyas of Sathsampradaya who teach these Rahasyas and their meanings;
31. The conduct of Sishyas who are totally indebted to their Acharyas and what they could do, since no compensation could ever be enough for Acharyas; and
32. Thus, as per Sruthi-Smriti-Suthra Sampradayam, and with good logic, to clarify doubts and to remove seeming contradictions, I authored this work, says Swami Desikan.

Those who want to learn this work, have to pray to a Sadhacharyan and obtain Upadesam of it in the proper mode. Swami says that this work is blemishless since it follows the right path trod by Purvacharyas.

Thus, the divine feet of Sriya: Pathi is both the Upaaya and Praapya for all of us.

***(Concluded)***

ஸ்ரீ:



# *With Pranams:*

**Kimsuka Narasimhan,**
**S. Narasimhan & Pushpa Narasimhan,**
No. 26, Poes Garden,
Ceebros Arjay, Chennai 600 086.
&
**N. Seshadri & Family,**
8/16, Justice Sundaram Road,
Mylapore, Chennai & 600 004.

**SVDD thanks Kimsuka Narasimhan, S. Narasimhan & Pushpa Narasimhan and N. Seshadri & Family** for sponsoring this month's issue of Desika Sandesam





ஏகாதசி புறப்பாடு





கைசிக த்வாதசி - புராண படனம்







ச்ரவணம் புறப்பாடு





